சிமெண்ட் நிறுவனத்தைக் கண்டித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

மதுக்கரையில் தனியார் சிமெண்ட் நிறுவனத்தைக் கண்டித்து சனிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள்.

கோவை, செப். 5: கோவை மாவட்டம், மதுக்கரையில் தனியார் சிமெண்ட் நிறுவனத்தைக் கண்டித்து குரும்பபாளையம் கிராம மக்கள் சனிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மதுக்கரையில் தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான சிமெண்ட் தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், இந்த நிறுவனத்தை தனியார் பெருநிறுவனம் வாங்கியிருப்பதாகக் கூறப்படும் நிலையில், அந்த நிறுவனம் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் சிமெண்ட் பொடி மாசுவைக் கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்துவதில்லை என்று ஆலைக்கு அருகேயுள்ள குரும்பபாளையம் கிராம மக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில், சிமெண்ட் நிறுவனம் சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிப்பதாகக்கூறி மதுக்கரை, காந்தி நகர் பகுதியில் பொதுமக்கள், விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, சிமெண்ட் ஆலையில் இருந்து வெளியேறும் துகள்களால் காற்று, நீர் மாசுபடுவதாகவும், மக்களுக்கும், கால்நடைகளுக்கும் பல்வேறு நோய்கள் ஏற்படுவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

மேலும், சிமெண்ட் ஆலைக் கழிவுகளால் பாதிக்கப்பட்ட வாழைத்தார்கள், வாழை இலைகள், காய்கறிகளையும் எடுத்து வந்திருந்தனர்.

பயன்படுத்தப்பட்ட கார்கள் விற்பனை முகாம்

கோவை கார்ஸ் 327 நிறுவனத்தில் நடைபெறும் பயன்படுத்தப்பட்ட கார்கள் விற்பனை முகாமைத் தொடங்கிவைத்து வாடிக்கையாளருக்கு கார் சாவியை வழங்கிய சிறப்பு விருந்தினர் டாக்டர் மாதேஸ்வரன். உடன், நிறுவன உரிமையாளர் விஷ்ணு வேணுகோபால்.

கோவை, செப். 5: கோவை கார்ஸ் 327 நிறுவனம் நடத்தும் பயன்படுத்தப்பட்ட கார்கள் (யூஸ்டு கார்) விற்பனை சிறப்பு முகாம் கோவையில் செப்டம்பர் 10-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இது குறித்து கார்ஸ் 327 நிறுவனத்தின் உரிமையாளர் விஷ்ணு வேணுகோபால் கூறியிருப்பதாவது: கார்ஸ் 327 நிறுவனத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா, யூஸ்டு கார்ஸ் விற்பனையின் 10-ஆவது மெகா முகாம் பட்டணம் எல்&டி பிரதான சாலையில் உள்ள நிறுவன வளாகத்தில் நடைபெறுகிறது. செப்டம்பர் 10-ஆம் தேதி வரை நடைபெறும் இந்த முகாமில் 500-க்கும் மேற்பட்ட கார்கள் விற்பனைக்கு நிறுத்தப்பட்டுள்ளன. காலை 9.30 மணி முதல் இரவு 8 மணி வரை இந்த முகாம் நடைபெறுகிறது.

முகாமில் கலந்து கொள்ளும் அதிர்ஷ்டசாலிகளுக்கு குலுக்கல் முறையில் சிறப்பு பரிசுகளும், கார் வாங்கும் அனைவருக்கும் வெள்ளி நாணயங்களும் பரிசாக வழங்கப்படும். எனவே, கார் வாங்க உள்ளவர்கள் இந்த முகாமில் பங்கேற்றுப் பயனடையலாம் என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இந்த முகாமை கோவை ராயர் கேர் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் மாதேஸ்வரன் தொடங்கிவைத்தார்.

காலி மதுபாட்டில்களைத் திரும்பப் பெறும் திட்டத்துக்கு விரைவில் டெண்டர்

அமைச்சர் விக்னேஷ்

பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள சித்த மருத்துவப் பிரிவு கட்டடத்தைத் திறந்துவைத்த அமைச்சர்கள் விக்னேஷ், சம்பத்குமார்.

பொள்ளாச்சி, செப். 5: காலி மதுபாட்டில்களைத் திரும்பப் பெறும் திட்டத்துக்கு விரைவில் டெண்டர் விடப்படும் என்று அமைச்சர் விக்னேஷ் தெரிவித்தார்.

பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவ வெளிநோயாளிகள் பிரிவுக்கு ரூ.55.5 லட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்தை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் விக்னேஷ், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சம்பத்குமார் ஆகியோர் சனிக்கிழமை திறந்துவைத்தனர். இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர், மருத்துவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதைத் தொடர்ந்து, அமைச்சர் விக்னேஷ் செய்தியாளர்களிடம் கூறுகையில், டாஸ்மாக் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. பராமரிப்பு செலவு வழங்கப்படவுள்ளது. ஊழியர்களின் அதிகபட்ச தேவையை நிறைவேற்றியுள்ளோம். காலி மதுபாட்டில்களைத் திரும்பப் பெறும் திட்டத்துக்கு விரைவில் டெண்டர் விடப்படும். டாஸ்மாக் ஊழியர்கள் தவறு செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

விருது...

கோவை பாரத மாதா நற்பணி அறக்கட்டளை சார்பில் புலியகுளம் புனித அந்தோணியார் ஆண்கள் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட தலைமை ஆசிரியர் ஜான் பெர்னாட் உள்ளிட்ட ஆசிரியர்கள். உடன், அறக்கட்டளை நிறுவனர் கௌரி சங்கர், நிர்வாகிகள் பாபு, நந்தகோபால் உள்ளிட்டோர்.

8 பவுன் நகை, வைரக்கல் திருடியவர் மீது வழக்கு

கோவை, செப். 5: கோவை, வடவள்ளியில் 8 பவுன் நகை, வைரக்கல் திருடிய நபர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோவை, வடவள்ளி செல்வம் நகரைச் சேர்ந்தவர் ராமகிருஷ்ணன் (57). இவர் வசித்து வரும் வாடகை வீட்டை காலி செய்துவிட்டு வடவள்ளி பகுதியில் உள்ள மற்றொரு வாடகை வீட்டுக்கு கடந்த மாதம் 28-ஆம் தேதி குடியேறியுள்ளார். அப்போது, வீட்டு உபயோகப் பொருள்களை வாகனத்தில் ஏற்றி இடமாற்றம் செய்வதற்காக தொண்டாமுத்தூரைச் சேர்ந்த சேகர் என்பவரை நியமித்துள்ளார். அப்போது, ராமகிருஷ்ணன் வீட்டில் இருந்த 8 பவுன் கொண்ட 2 பிரேஸ்லெட்டுகள், ஒரு வைரக்கல் ஆகியவற்றை சேகர் திருடியதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து ராமகிருஷ்ணன் அளித்த புகாரின்பேரில் சேகர் மீது வடவள்ளி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

வீட்டின் பூட்டை உடைத்து ரூ.50 ஆயிரம் திருட்டு

சூலூர், செப். 5: சூலூர் அருகே இறைச்சிக் கடை உரிமையாளரின் வீட்டின் பூட்டை உடைத்து ரூ.50 ஆயிரம் ரொக்கம், வீட்டு உபயோகப் பொருள்களைத் திருடிச் சென்ற மர்ம நபர்களை போலீஸார் தேடி வருகின்றனர்.

சூலூர் அருகேயுள்ள பாப்பம்பட்டி பிரிவு சந்தான லட்சுமி நகரைச் சேர்ந்தவர் சேகர் (56). இறைச்சிக் கடை வைத்துள்ளார்.

இந்நிலையில், அவர் வீட்டைப் பூட்டிவிட்டு வெள்ளிக்கிழமை வெளியே சென்றுள்ளார். இரவு வீடு திரும்பியபோது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு

கிடந்துள்ளது. அதிர்ச்சியடைந்த அவர் உள்ளே சென்று பார்த்தபோது பீரோவில் இருந்த ரூ.50 ஆயிரம் ரொக்கம், வீட்டு உபயோகப் பொருள்கள் உள்ளிட்டவை திருடுபோனது தெரியவந்தது. இது குறித்து சூலூர் காவல் நிலையத்தில் சேகர் புகார் அளித்தார்.

இதன்பேரில் வழக்குப் பதிவு செய்த போலீஸார், சம்பவம் நடைபெற்ற பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளைக் கைப்பற்றி திருட்டில் ஈடுபட்ட நபர்களைத் தேடி வருகின்றனர்.

தங்கப் பதக்கம்...

உத்தர பிரதேச மாநிலம், கோரக்பூரில் சிஜஎஸ்சிஇ சார்பில் அண்மையில் நடைபெற்ற தேசிய அளவிலான பள்ளிகளுக்கு இடையிலான 7-ஆவது துப்பாக்கிச் சுடும் போட்டியில் 14 வயதுக்குள்பட்டோருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் பங்கேற்று தங்கப் பதக்கம் வென்ற கோவை ஜி.டி. பள்ளி மாணவி சுஷ்மிதா மனோஜ்குமார்.

நேரு தொழில்நுட்பக் கல்லூரியில்

முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வகுப்புகள் தொடக்கம்

கோவை நேரு தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் தொடக்க விழாவை குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்த சிறப்பு விருந்தினர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன்.

கோவை, செப்.5: கோவை நேரு தொழில்நுட்பக் கல்லூரியில் முதலாம் ஆண்டு பி.இ., பி.டெக். மாணவர்களுக்கான வகுப்புகள் தொடக்க விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவுக்கு நேரு குழும நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரி பி.கிருஷ்ணகுமார் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் எம்.சிவராஜா, கல்லூரியின் சிறப்புகள், வசதிகள், முன்னாள் மாணவர்கள் குறித்து உரையாற்றினார்.

பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று பேசுகையில், மாணவர்களின் வாழ்க்கை ஒரு தேரைப் போன்றது. அதன் ஒரு வடத்தைப் பெற்றோரும், மற்றொரு வடத்தை ஆசிரியர்களும் இணைந்து இழுத்துச் சென்றால் மட்டுமே மாணவர்கள் வாழ்க்கையின் உயரத்தை அடைய முடியும். மேலும், உங்களின் எண்ணங்களே நீங்கள் யார் என்பதை நிர்ணயிக்கும் என்றார்.

மற்றொரு சிறப்பு விருந்தினரான வெங்கடேஸ்வரன் லோகநாதன் பேசுகையில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை சரியான முறையில் பயன்படுத்தினால், அது உறுதியான வேலைவாய்ப்புக்கு வழிவகுக்கும் என்றார்.

விழாவில், நேரு சர்வதேச பள்ளியின் தாளாளர் சைதன்யா கிருஷ்ணகுமார், நிர்வாக இயக்குநர் ஹெச்.என்.நாகராஜா, துறைத் தலைவர்கள் கே.பரிமளா காந்தி, டி.ஜெயபிரகாஷ், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

கோவையில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேருவின் சகோதரர்கள் வீடுகளில் லஞ்ச ஒழிப்புத் துறை சோதனை

கோவை, செப். 5: கோவை, சிங்காநல்லூர் பகுதியில் திமுக முன்னாள் அமைச்சர் கே.என்.நேருவின் சகோதரர்கள் வீடுகளில் லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸார் சனிக்கிழமை சோதனை மேற்கொண்டனர்.

சென்னை, திருச்சி உள்ளிட்ட இடங்களில் திமுக முன்னாள் அமைச்சர் கே.என்.நேருவின் வீடு, அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் சனிக்கிழமை சோதனை மேற்கொண்டனர்.

இந்நிலையில், கோவை, சிங்காநல்லூர் அருகேயுள்ள கள்ளிமடை மற்றும் மசக்காளிபாளையத்தில் உள்ள அவரது சகோதரர்கள் மணிவண்ணன், ரவிச்சந்திரன் ஆகியோர் வீடுகளிலும் லஞ்ச ஒழிப்பு போலீஸார் சோதனை மேற்கொண்டனர். இதேபோல, கோவை, ராமநாதபுரம் சிவராம் நகரில் உள்ள ஓய்வுபெற்ற மாநகராட்சி நகரமைப்பு அலுவலர் சசிப்பிரியா வீட்டிலும் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

கோவை லஞ்ச ஒழிப்பு கூடுதல் துணை கண்காணிப்பாளர் ராஜேஷ் தலைமையில் காவல் ஆய்வாளர் ஆறுமுகம் மற்றும் போலீஸார் காலை 7 மணி முதல் சோதனை மேற்கொண்டனர். ஒவ்வொரு பகுதிக்கும் தலா 4 லஞ்ச ஒழிப்பு போலீஸார் சென்று சோதனை மேற்கொண்டனர்.

சோதனையின்போது, வீட்டில் இருந்த ஆள்களை வெளியிலும், வெளியில் இருந்த ஆள்களை வீட்டுக்குள்ளும் போலீஸார் அனுமதிக்கவில்லை.

பஞ்சாப் நேஷனல் வங்கி
punjab national bank

கடன் மீட்பு நிர்வாகக் கிளை (ARMB) : எண்.448A, டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயம்புத்தூர் - 641 018.
போன் : 0422 2231314, 0422-2231345, மொபைல் : 9963993409, மின்னஞ்சல் : cs4371@pnb.bank.in

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 24.09.2026 தேதி அன்று (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)
முன்வைப்புத் தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசித் தேதி மற்றும் நேரம் : 24.09.2026, மாலை 3.00 மணி வரை

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.
பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/அடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையாள சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும். பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் : தெரியவில்லை.

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை

லாட் எண்.	கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/ உத்தரவாதமளித்தவர் பெயர் மற்றும் விலாசம்	பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் / உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்)	அ) 2002 சர்பாசி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி ஆ) நிலுவைத் தொகை இ) 2002 சர்பாசி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான சுவாதீனம் எடுத்த தேதி ஈ) சுவாதீனத்தின் தன்மை அடையாளம் /கொள்நிலை/ ஆக்கபூர்வ சுவாதீனம்	1) ரிசர்வ் விலை 2) முன்வைப்புத் தொகை (EMD) 3) ஏல மடங்குத் தொகை
1	**BO : ஆர்.எஸ்.புரம் (ID: 525910) (தற்போது கோயம்புத்தூர் ARMBக்கு மாற்றப்பட்டுள்ளது)** **M/s. குவாலிட்டி பாலிமர்ஸ்** **கடன்தாரர் :** **M/s. குவாலிட்டி பாலிமர்ஸ்,** கதவு எண்.127, N.G.R.வீதி, P.N.பாளையம், கோயம்புத்தூர் - 641 037. **பங்குதாரர்/அடமானதாரர் :** **திருமதி.R.வசந்தா,** க/பெ.திரு.ரங்கசாமி, எண்.3/11A, மசக்காளிகோனார் வீதி, மாச்சம்பாளையம், குறிச்சி, சுந்தராபுரம் அஞ்சல், கோயம்புத்தூர் - 641 024. **பங்குதாரர் :** **திருமதி.N.மாலதி,** க/பெ.T.சுரேஷ் ஜெயபிரகாஷ், எண். M-685, III பிளாக், கணபதி மா நகர், கோயம்புத்தூர் - 641 006.	**(அட்டவணைச் சொத்து) :** **திருமதி.R.வசந்தாவின் பெயரிலமைந்த சொத்து :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுகா, குறிச்சி கிராமம், சர்வே எண்.83, இதிலடங்கிய புஞ்சை ஏக்கர் 4.48 செண்ட், இதில் 4.00 ஏக்கருக்கு **நான்கெல்லைகள் விபரம் :** சர்வே எண்.84 ல் உள்ள சொத்துக்கு வடக்கு, அம்மாசி கோனார் மற்றும் பிறருக்குச் சொந்தமான சொத்துக்களுக்குத் தெற்கு, தெள்வடல் இடையர்பாளையம் ரோட்டுக்குக் கிழக்கு, செங்குட்டை செல்லும் தெள்வடல் பள்ளத்துக்கு மேற்கு. இவ்வெல்லைகளுக்கிடையிலுள்ள கதவு எண்.3, வட்டக் குறுக்கு வீதி-2 ல் உள்ள சொத்து. இதன் **நான்கெல்லைகள் விபரம் :** 10 அடி அகல கிழமேல் ரோட்டுக்கு வடக்கு, நாகமுத்துக் கோனார் மற்றும் பழனியப்ப கோனாருக்குச் சொந்தமான சொத்துக்களுக்குத் தெற்கு, 3 அடி அகல தெள்வடல் ரோடுக்குக் கிழக்கு, கண்ணாத்தாளின் வீட்டுக்கு மேற்கு. **அளவுகளின் விபரம் :** தெள்வடல் இருபுறமும் - 50 அடி, கிழமேல் இருபுறமும் - 43¾ அடி, எனச் சேர்ந்த மொத்தம் 5 செண்ட் 7 சதுரடி நிலம், அங்கு கட்டப்பட்ட ஏதேனும் கட்டிடமிருப்பின் அதனுடன், வழக்கமான வழித்தட உரிமைகள் மற்றும் அங்குள்ள பிற வசதிகளில் உரிமைகளுடன். சொத்தானது குறிச்சி பஞ்சாயத்து எல்லைக்குட்பட்டு அமைந்துள்ளது. **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 10.953889 N, 76.966000 E**	அ) 04.12.2025 ஆ) (i) **ரூ.66,51,842.99 (ரூபாய் அறுபத்து ஆறு லட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து எண்ணூற்று நாற்பத்து இரண்டு மற்றும் பைசா தொண்ணூற்று ஒன்பது மட்டும்) 31.08.2026 தேதி வரை** பின்வட்டி மற்றும் பிற செலவுகளுடன் **(கணக்கு எண். 52598015001974)** இ) 24.03.2026 ஈ) அடையாளம்	1) **ரூ.38,20,000/-** (ரூபாய் முப்பத்து எட்டு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) 2) **ரூ.3,82,000/-** (ரூபாய் மூன்று லட்சத்து எண்பத்து இரண்டாயிரம் மட்டும்) 3) **ரூ.20,000/-** (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 24.09.2026 (வியாழக்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**

மின்-ஏலத்திற்கான நிபந்தனை விபரங்கள்
இவ்விற்பனையானது பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002ல் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.
1. சொத்துக்கள் 'எங்குள்ளதோ அங்கு', 'என்ன உள்ளதோ அது' மற்றும் 'உள்ளதுள்ளவாறே' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணையச் சொத்தின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் நன்கு அறிந்த வகையில் சரியானது, எனினும் அதில் காணப்படும் எந்த ஒரு தவறு, விடுதல் மற்றும் திருத்தத்துக்குப் பொறுப்பாக மாட்டார்.
3. விற்பனையானது கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலரால் **https://baanknet.com** இணையதளத்தில் உள்ள மின் ஏல மேடையில் **24.09.2026 (வியாழக்கிழமை); காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை** நடத்தப்பெறும்.
4. விற்பனை தொடர்பான மேலும் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள இணைய தளங்களைக் காணவும்.
https://baanknet.com & www.pnbindia.in

தேதி : 03.09.2026
இடம் : கோயம்புத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்
பஞ்சாப் நேஷனல் வங்கி

சர்பாசிச்சட்டம் 2002ன் கீழ் விதி 9(1)-ன் படியான சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு

பாங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda

வரதராஜபுரம் கிளை : எண்.29, V.V.மேன்சன், காமராஜர் சாலை, வரதராஜபுரம், கோயம்புத்தூர் - 641 015. போன் : +9384091611, 0422-2575655, 2599880
மின்னஞ்சல் : vjvapu@bankofbaroda.bank.in

கடன்தாரர்/உத்தரவாதமளித்தவர்களுக்கான கோரிக்கை அறிவிப்பு
(2002, சர்பேசி சட்டம் பிரிவு 13(2) ன் கீழான அறிவிப்பு)

பெறுநர் : **கடன்தாரர்கள் : M/s PTK ஸ்டீல்ஸ் (கடன்தாரர்), உரிமையாளர்- பவித்ரன் J,** எண்.342A, VK ரோடு, விசாகபட்டிணம் ஸ்டீல்ஸ் எதிரில், பீளமேடு, கோயம்புத்தூர் - 641004. **உத்தரவாதமளித்தவர்கள் : செல்வி. J கீர்த்தனா ஸ்ரீ, உத்தரவாதமளித்த லேட்.திரு. ஜவஹர் செல்வத்தின் சட்டபூர்வ வாரிசுதாரர்,** எண்.24, சக்தி நகர், 2வது வீதி, ஹோப்ஸ், மணீஸ் தியேட்டர் எதிர்புற ரோடு, கோயம்புத்தூர் - 641 006. **திரு. J பவித்ரன், உத்தரவாதமளித்த லேட்.திரு. ஜவஹர் செல்வத்தின் சட்டபூர்வ வாரிசுதாரர்,** எண்.24, சக்தி நகர், 2வது வீதி, ஹோப்ஸ், மணீஸ் தியேட்டர் எதிர்புற ரோடு, கோயம்புத்தூர் - 641 006. **திரு. J தமிழ்ச்செல்வன், உத்தரவாதமளித்த லேட்.திரு. ஜவஹர் செல்வத்தின் சட்டபூர்வ வாரிசுதாரர்,** எண்.24, சக்தி நகர், 2வது வீதி, ஹோப்ஸ், மணீஸ் தியேட்டர் எதிர்புற ரோடு, கோயம்புத்தூர் - 641 006. **திருமதி. J தங்கரதி, உத்தரவாதமளித்த லேட்.திரு. ஜவஹர் செல்வத்தின் சட்டபூர்வ வாரிசுதாரர்,** எண்.24, சக்தி நகர், 2வது வீதி, ஹோப்ஸ், மணீஸ் தியேட்டர் எதிர்புற ரோடு, கோயம்புத்தூர் - 641 006.

மதிப்பிற்குரியீர்,

பொருள் : எமது, வரதராஜபுரம் கிளையில் பெற்ற கடன் வசதிகள்

1. தங்களுக்குப் பல்வேறு கடன் வசதிகளை அனுமதித்தும், அனுமதிக்கான நிபந்தனை விதிகளைத் தெரிவித்தும் அனுப்பப்பட்ட **எமது கடிதம் எண்.CBE:VPM:BR:CM:RJS:1689:2019-20 நாள் : 05.11.2019** ஐ தங்கள் பார்வைக்குக் கொண்டு வருகிறோம். அதில் கண்ட அனுமதிக்கிணங்க, அதற்கான பிணையத்தை ஏற்படுத்தி கீழே குறிப்பிட்டவாறான கடன் வசதிகளை தாங்கள் அனுபவிக்க ஆரம்பித்தீர்கள். அவ்வாறான கடன் கணக்குகள், பிணைய நலன் உருவாக்கத்தின் பின்னர் அவற்றின் தற்போதைய நிலுவைகள் கீழ்வருமாறு :

வசதியின் தன்மை மற்றும் வகை : கேஷ் கிரெடிட்
கடன் தொகை : ரூ.35,00,000/- (ரூபாய் முப்பத்து ஐந்து லட்சம் மட்டும்)
வட்டி விகிதம் : 10.70%
நிலுவைத் தொகை (ஒப்பந்த நிலுவை) 12.08.2026 தேதி வரை : ரூ.35,21,650.71 (வட்டியுடன் சேர்த்து)
பிணைய ஒப்பந்தம் பிணையச் சொத்தின் சுருக்க விபரத்துடன் :

அடமானச் சொத்து விபரம் : முதன்மைப் பிணையம் : அடமானத்திற்குள்ளான அனைத்து கட்டணம் விதிக்கத்தக்க நடப்புச் சொத்துக்கள், சரக்குகளின் இருப்புகள், வரப்பெற்றவை, ஆலை மற்றும் இயந்திரங்கள், உபகரணங்கள், கருவிகள், உதிரிபாகங்கள் மற்றும் எல்லா வகையான, நடப்பிலும் மற்றும் பின்னாளிலுமான அசையும் சொத்துக்கள். **சார்-பிணையம் :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கணபதி சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலுகா, விளாங்குறிச்சி, மாநகராட்சி சர்வே எண்.380 பகுதி, நடப்பு டவுன் சர்வே எண்.223, வார்டு எண்.26, பிளாக் எண்.3, குருசாமி நகர் II ன்படியான 6.16 புஞ்சை ஏக்கருக்கு எல்லைகள் விபரம் : சர்வே எண்.404 ரோட்டுக்கு வடக்கு, சுப்ரமணியன் நிலங்களுக்குக் கிழக்கு, சர்வே எண்.381 சொத்துக்குத் தெற்கு, சர்வே எண்.404 ல் உள்ள ரோட்டுக்கு மேற்கு. இதன் மத்தியில் உள்ள 0.56 புஞ்சை ஏக்கர் நிலம் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு, நகர மற்றும் ஊரகத்திட்ட துணை இயக்குநரின் அங்கீகாரத்தை L P/R (CPN) எண்.69/1987 ல் பெற்றதில் அதிலமைந்த கடை எண்.1 க்கு எல்லைகள் மற்றும் அளவுகளின் விபரம் : 46 அடி அகல கிழமேல் ரோட்டுக்கு வடக்கு, மனை எண்.34 மற்றும் 33 க்குக் கிழக்கு, 30 அடி அகல கிழமேல் ரோட்டுக்குத் தெற்கு, 40 அடி அகல தெள்வடல் ரோட்டுக்கு மேற்கு. இதன் மத்தியில், கிழமேல் வடபுறம் - 46½ அடி, கிழமேல் தென்புறம் - 35½ அடி, தெள்வடல் மேற்புறம் - 115 அடி, தெள்வடல் கிழபுறம் - 105 அடி, வடகிழக்கு மூலை குறுக்கு - 7 அடி, இந்த அளவுகளுள்ள மொத்தம் 5265 சதுரடி. மேலும் ஆவண எண்.2297/1997 ன் விற்பனைப் பத்திரத்தின்படி, மனை எண்.1 தென்புற பகுதி கடைக்கு எல்லைகள் மற்றும் அளவுகளின் விபரம் : 46 அடி அகல கிழமேல் ரோட்டுக்கு வடக்கு, மனை எண்.34 க்குக் கிழக்கு, ஜீவநாத் வாங்கிய மேற்குறிப்பிட்ட கடை மனையின் நடுப் போர்ஷனுக்குத் தெற்கு, 40 அடி அகல தெள்வடல் ரோட்டுக்கு மேற்கு. இதன் மத்தியில், அளவுகளாக, கிழமேல் வடபுறம் - 44¾ அடி, கிழமேல் தென்புறம் - 35½ அடி, தெள்வடல் மேற்புறம் - 41 அடி, தெள்வடல் கிழபுறம் - 35 அடி, வட கிழக்கு மூலை குறுக்கு - 7 அடி, சேர்ந்த மொத்தம் 1724 சதுரடி அல்லது 3 செண்ட் 417 சதுரடி அல்லது 160.163 சதுர மீட்டர் நிலம் மற்றும் அனைத்து வழித்தட உரிமைகள் அங்குள்ள அனைத்துப் பிறபாத்திய அனுபந்தங்களுடன். குருசாமி நகரில் அமைந்துள்ள மேற்படி சொத்து, கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்டு அமைந்துள்ளது.

1. **22.05.2025** தேதியிட்ட கடன் ஒப்புகைக் கடிதத்தின் வாயிலாக வங்கிக்கு, கேஷ் கிரெடிட்டிற்குத் தாங்கள் செலுத்த வேண்டிய 21.05.2025 தேதிப்படியான நிலுவை **ரூ.34,75,072.17** யை ஏற்றுக் கொண்டுள்ளீர்கள். மேற்படி நிலுவை **12.08.2026** தேதி வரையான வட்டியும் சேர்ந்ததாகும்.
2. மேற்சொன்ன கடன்கள்/நிலுவைகளுக்கு **2026 ஜூலை, 30.09.2026** வரையான காலாண்டிற்கு தாங்கள் வட்டி செலுத்துவதினின்று தவறி விட்டதை ஏற்கெனவே தாங்கள் அறிவீர்கள். மேலும் டெர்ம் லோன்/டிமாண்ட் லோன் கடன்களின் **2026 மே** தேதிக்கான நிலுவையை செலுத்துவதினின்று தவறி விட்டீர்கள்.
3. மேற்கண்ட தொகைகளைச் செலுத்துவதில் தாங்கள் தவறிவிட்ட காரணத்தால் தங்கள் கடன் கணக்கு **11.08.2026** அன்று, ரிசர்வ் வங்கியின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கிணங்க வராக்கடன் எனத் தீர்மானிக்கப்பட்டது. எமது தொடர்ச்சியான வேண்டுகோள்கள் மற்றும் கேட்புகளின் பின்னரும் தாங்கள் காலங்கடந்து விட்ட அக்கடன்களையும் வட்டி உட்பட திரும்பச் செலுத்தவில்லை.
4. மேலே குறிப்பிட்டவாறான பல்வேறு பிணையங்களால் பிணையப்படுத்தப்பட்ட கடன் வசதிகள் மீதான தங்கள் நிலுவைகளைத் கடன்தாரர் திரும்பச் செலுத்த இயலாது விட்டதாலும், தங்கள் கடன் கணக்கு வராக்கடன் கணக்கென வகைப்படுத்தப்பட்டதாலும், நாங்கள் சர்பேசிச் சட்டம் 2002 பிரிவு 13ன் உப பிரிவு 2ன் கீழ் தங்களுக்கு, தாங்கள் வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகை, **ரூ.35,21,650.71 (ரூபாய் முப்பத்து ஐந்து லட்சத்து இருபத்து ஓராயிரத்து அறுநூற்று ஐம்பது மற்றும் பைசா எழுபத்து ஒன்று மட்டும்) (வட்டியுடன் சேர்ந்து)** மற்றும் பொருந்தும் பின்வட்டி மற்றும் வங்கிச் செலவுகளுடன், பத்தி 1ல் குறிப்பிட்டவாறு இந்த அறிவிப்பு நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்தக் கோரி கேட்பு அறிவிப்பு அனுப்பப்படுகிறது. மேலும் அவ்வாறு மேற்குறிப்பிட்ட தொகை முழுவதும், திரும்பச் செலுத்தப்படும் நாள்வரையான வட்டி சேர்த்துத் தாங்கள் செலுத்தத் தவறினால் நாங்கள் மேற்சொன்ன சட்டப் பிரிவு 13 ன் உபபிரிவு 4ன் கீழ் எமக்களிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு/அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்தி நிலுவை வசூலிக்க நேரிடும் என்பதைக் குறித்துக் கொள்ளவும்.
5. தாங்கள் கடன் வசதி பெற்றுள்ள இனங்கள் அனைத்துக்கும் மேற்குறிப்பிட்ட பத்தி 1ல் குறிப்பிட்டவாறான ஒவ்வொரு கடன் வசதிக்கும் ஒப்புக் கொள்ளப்பட்ட விதத்திலான வட்டி சேர்த்துச் செலுத்த நேரிடும் என்பதையும் அறியவும்.
6. மேற்சொன்ன சட்டத்தின் உபபிரிவு எண்.13க்குத் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது. அதில் கண்ட நிபந்தனைப்படி தாங்கள் மேலே பத்தியில் சொல்லப்பட்ட பிணையச் சொத்துக்களை எந்த ஒருவிதத்திலும், விற்பனை மூலம், குத்தகை அல்லது பிறவழிகளில் (சாதாரண வணிக வழிமுறைகளில்லாது) எங்களது எழுத்துமூலமான முன் அனுமதியின்றி உரிமை மாற்றம் மேற்கொள்வது தடைக்குள்ளாகிறது. அத்துடன், அவ்வாறு பிரிவு 13 (உபபிரிவு 13) ல் சொல்லப்பட்ட நிபந்தனைகளை மீறுவது, மேற்படி சட்டத்தின் 29வது பிரிவின்படி தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும்.
7. மேலும், வங்கியால் தங்களிடம் கோரப்பட்ட தொகை அனைத்தும், பிற கட்டணங்கள், செலவினங்கள் சேர்த்து, இச்சொத்தின் பொது ஏலம்/ விலைப்புள்ளி கோரல்/டெண்டர்/தனிநபர் ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான அறிவிப்பு வெளியிடப்படும் நாளுக்கு முன்னர் செலுத்திவிட்டீர்கள் என்றால், தாங்கள் பிணையம் வைத்துள்ள சொத்துக்கள் முழுவதையும் மீட்டுக் கொள்ளலாம் என்ற மேற்படி சட்டப் பிரிவின் 13வது பிரிவு உபபிரிவு (8)க்குத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். அவ்வாறு அன்றி மேற்சொன்ன அறிவிப்பு வெளியிடப்பட்டுவிட்டால், பிணையச் சொத்துகளை மீட்டுக் கொள்ளும் உரிமை தங்களுக்குக் கிடைக்காது.
8. இந்தக் கேட்பு அறிவிப்பு எவ்வித விருப்பு, வெறுப்புமின்றி எங்களுக்கான எந்தவித உரிமைகள் மற்றும் தீர்வுகளுக்கான விலக்குகள் ஏதுமின்றி, எங்களுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகைக்கென வரையறையின்றி மேற்கொண்டும் கேட்புகள் அனுப்பும் உரிமையுடனும் வெளியிடப்பட்டுள்ளது.

தேதி : 12.08.2026
இடம் : கோயம்புத்தூர்

ஒம்/- அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்
பேங்க் ஆஃப் பரோடா